**ஊராட்சி அரசாங்கப் பெண் தலைவர்களின் கூட்டமைப்பு (TNFWPPG)**
எண்.54, எல்டிஜி சாலை, சின்னமலை, சைதாப்பேட்டை, சென்னை – 600 015
தொலைபேசி: 044–2235 3503, மின்னஞ்சல்: contact@hrf.net.in இணையதளம்: www.hrf.net.in

26.01.2017

**மக்கள் அதிகாரத்தை வலுப்படுத்தி பங்கேற்பு ஜனநாயகத்தை நிலைநிறுத்த கீழ்காணும் தீர்மானங்களை முன்வைப்போம்:**

- கிராமத்தில் உள்ள நிலம் மற்றும் இயற்கை வளங்களைப் பாதுகாப்பதற்கான பொறுப்பு கிராம சபைக்கு உள்ளதை உறுதி செய்ய வேண்டும்.
- அனைத்துத் திட்டங்களுக்கான பயனாளிகள், வறுமைக் கோட்டிற்கு கீழுள்ளோர் பட்டியல் கிராம சபையாலேயே இறுதி செய்யப்பட வேண்டும்.
- கிராம சபையும், கிராம ஊராட்சியால் அமைக்கப்பட்ட குழுக்களும் தன் எல்லைக்குள் நிறைவேற்றப்படும் எந்த ஒரு திட்டத்தையும் கண்காணிக்கவும், மறு ஆய்வு செய்யவும் வேண்டும்.
- கிராம ஊராட்சியில் பெரும்பான்மை ஓட்டு இருந்தாலன்றி எந்தவொரு திட்டமும் அனுமதிக்கப்படக்கூடாது. கிராம சபையில் கிராம ஊராட்சியால் அனுமதிக்கப்பட்ட பிறகே வணிக (அல்லது) தொழிற்திட்டமும் தொடங்க வேண்டும்.
- ஊராட்சியில் உள்ள அனைத்து இயற்கை வளங்கள் நீர்நிலைகள், பொது நிலங்கள், வறுமை ஒழிப்பு, நிலமற்றவர்களுக்கான நிலம் பகிர்ந்தளிப்பு, ஊராட்சிகளுக்கான வருமானம் மற்றும் ஆக்கிரமிப்புகளை அகற்றுவதில் மீதான கிராம சபையால் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் மீதான நடவடிக்கைகளுக்கு மாவட்ட அதிகாரிகள் முழு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும்.
- வறுமை ஒழிப்புத் திட்டங்கள் உள்ளிட்ட அனைத்துத் திட்டங்களும் கிராம சபையால் மட்டுமே மேற்கொள்ளப்பட வேண்டும். இத்திட்டங்கள் மாவட்ட திட்டமிடல் குழுக்களால் ஒருங்கிணைக்கப்பட்டு மத்திய, மாநில அரசுகளால் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும்.
- மத்திய, மாநில அரசுகளின் ஊராட்சிகளுக்கான திட்ட நிதி, ஊராட்சிகளை நேரடியாகச் சென்றடையும் வகையில் நிர்வாக மாற்றம் கொண்டு வரப்பட வேண்டும்.
- அனைத்து பொது நீர்வள ஆதாரங்களையும் கிராம ஊராட்சிகளிடம் ஒப்படைப்பதற்கான சட்டப் பிரிவு 84 தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தில் சேர்க்கப்பட வேண்டும்.
- தலித் சமூகத்தைச் சேர்ந்த குழந்தைகளுக்கான கல்வி, உடல் நலப் பராமரிப்பு ஆகியவற்றுக்கான அரசின் உத்தரவாதத்தை செயல்படுத்த வலியுறுத்தல்.
- ஒவ்வொரு பஞ்சாயத்திலும் நலக்குழு அமைக்கப்பட்டு, பெண் சிசுக்கொலை, கருக்கொலையைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். பெண் குழந்தைகளின் மதிப்பினை உணர்த்தும் விழிப்புணர்வு பிரச்சாரம் மேற்கொள்ள வேண்டும்..

- 14 வயதிற்குட்பட்ட குழந்தைகள் நோய்வாய்ப்படுதல், நோயின் விபரம் மற்றும் இறப்பு குறித்த பதிவேட்டினை பஞ்சாயத்து அமைப்புகள் மூலமாகப் பராமரிக்க வேண்டும்.
- குழந்தைகளின் ஆண்–பெண் விகிதாச்சாரம் மற்றும் அவர்களின் சமூக, பொருளாதாரப் பின்னணி குறித்துக் கணக்கெடுப்பு நடத்துவதுடன், இந்தத் தகவல்கள் குறிப்பிட்ட காலங்களுக்கு ஒருமுறை புதுப்பிக்கப்பட நடவடிக்கை எடுக்க வேண்டும்.
- பெண் கருக்கொலைக்கு உடந்தையாக உள்ள மருத்துவர்கள்மீது தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.
- அனைத்து குழந்தைகளும் பள்ளியில் சேர்க்கப்படுவதை ஊக்குவித்து, பள்ளி இறுதிவரை கல்வி தொடர்ந்து பெற வழிவகை செய்ய வேண்டும்.
- பள்ளியை விட்டு நின்றுவிட்ட பெண் குழந்தைகள் மீண்டும் கல்வியைத் தொடர நடவடிக்கை எடுக்க வேண்டும்.
- குழந்தைத் திருமணம் நடைபெறாமல் இருக்க அவ்வாறான திருமணங்கள் சட்டரீதியாக தடுத்து நிறுத்த வேண்டும்.
- பெண்களின் நலன்களைக் கவனிப்பதற்காக பெண்கள் குழுக்களை உருவாக்க வேண்டும்.
- பெண்களுக்கு எதிரான வன்முறை அற்ற மாதிரி கிராம ஊராட்சியாக எங்கள் ஊராட்சி கிராமங்களை மாற்ற நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.
- கிராமப் பொது வளங்கள் பாதுகாப்பு, பிற கிராம நலனுக்கான நடவடிக்கைகள் மற்றும் எந்தவிதமான முடிவெடுக்கும் நிலையிலும் 50 சதவீதம் பெண்கள் பங்கேற்பை உறுதி செய்ய வேண்டும்.
- பெண்கள் மற்றும் பெண் குழந்தைகளின் மீதான வன்முறைகளுக்கு உடனடியாக உள்ளூர் அளவிலான விசாரணையை பஞ்சாயத்து மேற்கொண்டு நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.
- தலித் மக்கள் சட்ட விரோதமாகப் போலீசாரால் காவலில் வைக்கப்படுவதிலிருந்து பாதுகாத்தல். இது குறித்த மக்களின் போராட்டங்களுக்கு சட்டரீதியான ஆதரவளிக்க வேண்டும்.
- காவல்நீதி நிறுவனங்களில் நிகழும் உரிமை மீறல்களுக்கு எதிராகக் குரலெழுப்புவதுடன் இந்நிறுவனங்களில் சீர்த்திருத்தங்கள் செய்ய பிரச்சாரம் மேற்கொள்ள வேண்டும்.
- சித்ரவதைக்கு எதிரான சர்வதேச உடன்படிக்கைகளின் ஷரத்துக்களை இந்திய நாடாளுமன்றத்தில் விவாதித்து உடனடியாக அதனை ஏற்றுக்கொள்ள வேண்டும். காவல்நிலையம் மற்றும் அனைத்து காவல்நீதி நிறுவனங்களிலும் சித்ரவதைகளை ஒழிப்பதற்காக கடுமையான சட்டங்களைக் கொண்டு வர வேண்டும்.
- டி.கே.பாசு எதிர் மேற்கு வங்கம் வழக்கில் உச்சநீதிமன்றம் தெரிவித்த 11 கட்டளைகளையும் மிகக் கடுமையாக பின்பற்றப்பட வேண்டும்.

******************